வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 12 (2019) | இந்துசமயம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 6) 2 | 11) 4 | 16) 1 | 21) 3 |
| 2) 2 | 7) 4 | 12) 5 | 17) 3 | 22) 1 |
| 3) 3 | 8) 5 | 13) 4 | 18) 5 | 23) 3 |
| 4) 5 | 9) 1 | 14) 4 | 19) 2 | 24) 3 |
| 5) 5 | 10) 2 | 15) 2 | 20) 1 | 25) 2 |

### பகுதி II

### பகுதி "அ)"

01. 1) சிவ வழிபாடு - சிவயோகியார் / பசுபதி வழிபாடு
நடராஜர் வழிபாடு
லிங்க வழிபாடு
நந்தி வழிபாடு
திரிமூர்த்தி வழிபாடு

சக்தி வழிபாடு - தாய் தெய்வ வழிபாடு
தரைப் பெண் வழிபாடு
மரங்களில் உறையும் தேவதை வழிபாடு

நாக வழிபாடு
சூரிய வழிபாடு
பலியிடுதல் சடங்கு

ஏனைய வழிபாடுகள் - மரம், பறவை, ஆறு, கலப்பு, தெய்வ வழிபாடு

விஸ்ணு வழிபாடு காலிங்க நடனம்

(5 புள்ளி)

2) சிந்து வெளி கால சமூக நிலையை கண்டுபிடிக்கப்பட்ட கட்டங்கள் புதைபொருட்கள், சித்திர எழுத்துக்களை கொண்டு அறிய முடிகிறது.

1) மாளிகை போன்ற கட்டட அமைப்புகள் மாடி வீடுகள் போன்றன கண்டுபிடிக்கப்பட்டமை.
2) ஊது குழல், மிருதங்கம், தவில் ஆகிய இசைக்கருவிகள் முத்திரையில் காணப்பட்டன.
3) இலை வடிவம் போன்றனவும் பாம்பு, மீன், சதுரம், வட்டம், தீட்டப்பட்ட உருவங்களும் மட்பாண்டங்களில்
4) மக்கள் நாகரிகமான வாழ்க்கை வாழ்ந்தனர் மேலாடை, கீழாடை அணிந்தனர்
5) கப்பல் கட்டுதல், தச்சுத் தொழில் சிற்ப தொழில் கைவினை தொழிலில் மக்கள் ஈடுபட்டனர்

(5 புள்ளி)

02. 1) இயற்கை தெய்வ வழிபாடு
மானசீக வழிபாடு
பண்டமாற்று முறை வழிபாடு - அக்னி முதலிடம்
வேள்வி, யாகம் - புரோகிதர்
யசுர்வேதம் - மந்திரங்கள், உருத்திர வழிபாடு.
இருக்கு வேதம் - சூரியன், காய்த்திரி மந்திரம்
சாம வேதம் - இசையுடன் கூடிய உபாசனை ஒரு தெய்வ, பலதெய்வக் கோட்பாடுகள்.
ஒழுக்க தெய்வம் - வர்ணன்
இல்லறக் கிரியைகள் - உபநயனம், சடங்குகள்

(5 புள்ளி)

2) "வேதங்களே அனைத்து அறங்களுக்கும் மூலம்"
(வேதோ கிலோ தர்மமூலம்)

வேதங்களில் சனாதனதர்மம், வைதீக தர்மம் என்பவற்றின் அடிப்படைகளை காணமுடியும். நற்சிந்தனைகளும், நற்செயல்களும் வேத இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன. நல்வாழ்வுக்கு ஏற்ற அறங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன.

யம சூக்தத்தில் நன்மையான வாழ்வில் அடிப்படைகள் கூறப்பட்டுள்ளன.

இல்லறதர்மம், ஆச்சிரம தர்மம், புருஷ்தர்மம்
ஸ்திரீதர்மம், இராஜதர்மம் ஆகியவை பிரதானமானவை
குரு வழிபாடு, குருவுக்கு கீழ்ப்படிதல், குருசேவை
ஆகியனவும் நற்கருமங்களாகும்.

வருணனுடைய ரிதம், தர்மம் தலைகாக்கும் எனும் கோட்பாட்டை வலியுறுத்துகின்றது.

(5 புள்ளி)

03.

1) புராணங்கள் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் ஆகிய சமய நெறிகளை எடுத்துக் கூறின. சிவபுராணம், விஸ்ணு புராணம், சூரிய புராணம் என்பன சிவன், விஸ்ணு, சூரியன் வழிபாடுகள் பற்றிக் கூறுகின்றன. பக்தியை அடிப்படையாகக் கொண்டு சமயப்பிரிவுகள் கூறப்பட்டன. சிவபிரான் தவம் மூலமே தன்னை அடையலாம் எனக் கூறியதாக புராணங்கள் கூறுகின்றன. தலயாத்திரை, தீர்த்தயாத்திரை பற்றியும் புராணங்கள் கூறுகின்றன. விரதங்கள் பற்றி அக்னி புராணம், கணேச புராணம் என்பன கூடுதலான விளக்கங்களை தருகின்றன. ஆலய வழிபாடு, உருவ வழிபாடு என்பன முக்கியம் பெறுகின்றன வேத அத்தியாயங்களும் தோத்திரங்களும் இடம் பெற்றன.

(5 புள்ளி)

2) புராணங்களில் பழைய கால அரசர்களின் பாரம்பரியங்கள் கூறப்பட்டுள்ளன. சந்திரவம்சம், சூரியவம்சம் என இரு வம்சங்களே ஆதியில் இருந்தன. பிற்பட்ட காலத்தில் சிசுநாகவம்சம், நந்தவம்சம், மௌரிய வம்சம் என்பன உருவான வரலாறு புராணங்களில் உள்ளன. இவை அரச மரபுகளைக் கூறுகையில் பிம்பிசாரன் பெரிய நகரம் அமைத்து, அங்கத நாட்டை தன் நகரத்துடன் இணைத்தமை பற்றியும் இராசகிருக நகரத்தின் விரிவாக்கம் பற்றிக் கூறும் குப்தர்வம்சத்தின் வரலாறு பற்றியும் அறிய முடிகின்றது. தக்கணத்தைச் சேர்ந்த சாதாவாகன வம்சத்து அரசரின் பெயர், ஆட்சி செய்த இடங்கள் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. புராணத்தின் ஐந்து இலக்கணங்களுள் வம்சம் வம்சானுசரிதம் என்பன அரசர் தெய்வ பரம்பரையாக கூறப்பட்டுள்ளதுடன் அந்தந்த வம்சங்களின் வரலாறு கூறப்பட்டுள்ளன. புராணங்களில் கூறப்பட்டுள்ள யுகங்கள் அரச வரலாறுகளுடன் தொடர்பானவையாகும்.

(5 புள்ளி)

04.

1) அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர்நாதமாக உள்ளது. சிவாகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் கிரியை முறைகளை வகுத்துக் கூறுகின்றன. சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை. கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள் அவற்றை ஆற்றும் விதிகள் பூசையின் அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் என்பன பற்றிக் கூறுகின்றன. சிவாகமங்களில் வரும் பூஜா விதிப்படலம் போன்ற பிரிவுகளில் மேற்கூறிய அம்சங்களுடன் தொடர்புபட்டவை. கோயிற் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி உள்ளன.

(5 புள்ளி)

2) சைவ ஆகமமாகிய சிவாகமம் நாற்பாதங்களை உடையது. அவற்றில் ஞானபாதம் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். சித்தாந்தம் என்ற பெயர் முதலில் இடம்பெற்றது திருமந்திரத்திலாகும். ஆகமக் கருத்துக்களை முதலில் திருமந்திரம் கூறியமையால் தமிழ் ஆகமம் எனப்படும் திருக்கோயிலில் முப்பொருள் அம்சங்கள் காணப்படுகின்றன. திருமுறைகளும், சித்தாந்த சாஸ்திரங்களும் சிவாகமங்களை முதன் நூலாகவும் சிறப்பு நூலாகவும் போற்றுகின்றன. திருமூலர் சிவாகமம் இறைவன் நூல் எனவும் சிறப்பு நூல் என்பதனை "வேத மொடாகமம் மெய்யாம்……." எனக் குறிப்பிட்டுள்ளார். சிவாகமங்களில் ஞானாபாதம் பிற்கால தத்துவ சிந்தனையாளர்கள் ஞானாபாதத்திலிருந்து பல்வேறு பிரமாணங்களை குறிப்பிட்டு விளக்குகின்றது. இவை மட்டுமல்லாது ஆகம உரையாசிரிகளினாலும் சிவாகம ஞானபாத சிந்தனைகள் முக்கியமிடம் பெறுகின்றது.

(5 புள்ளி)

05.

1) சாக்த வழிபாடு சைவநெறியுடன் நெருங்கிய தொடர்பு உடையது. புராதன காலம் தொடக்கம் சக்தி வடிவங்கள் வழிபடப்பட்டு வருகின்றன என்பதனை தொல்லியல் சான்றுகளில் இருந்து அறிய முடிகின்றது. வேத இலக்கியங்களிலும் பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. புராண இலக்கியங்களில், இதிகாசங்களில் ஆதிபாரசக்தியாக சாக்த தெய்வம் வழிபடப்படுகின்றது. சாக்ம வழிபாட்டின் தோற்றம் படைத்தல் சக்தியோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. ஆரம்பத்தில் நிலத் தெய்வமாக உருவகிக்கப்பட்டு பின் சக்தி வழிபாடாக பரிணாமம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. சைவ சித்தாந்தத்தில் சிவசக்திக் கோட்பாடு சைவ சமய சாக்த தொடர்பை எடுத்துக் கூறுகின்றது.

(5 புள்ளி)

2) தவம், ஜெபம், தியானம், பூசை, பிரார்த்தனை முறை மூலமும் தந்திரம், மந்திரம், யந்திரமுறை மூலம் வழிபடும் முறை காணப்படல்.

ஆகமம் சார், ஆகமம் சாரா வழிபாட்டு முறையென இருவழிபாட்டு முறை உண்டு

முறையென இருவழிபாட்டு முறை உண்டு

விரதங்கள் - மங்களவாரம், வரலட்சுமி விரதம்

சுவர்ணகௌரி விரதம்.

(5 புள்ளி)

agaram.lk

*06.*

1) திருவாசகம், திருக்கோவையார்

சைவ சித்தாந்தக்கருத்து அறிவியற்கருத்து இறைவனின் உருவச் சிறப்பு, ஆட்கொள்ளல், கழிவிரக்கம் பக்திமை விடுதலை வேட்கை, நிலையாமை போன்ற கருத்தினை கொண்டிருத்தல்.

(5 புள்ளி)

**2) பணிகள் :-**

ஆட்கொண்ட நிகழ்வில் அடியார்களுக் கெளியான் சிவபெருமான் என்பதை உணர்த்தியது, சைவசித்தாந்த கருத்தை பாமரமக்களும் உணரச் செய்தது, சைவத்தை அரசம க்கள் ஆதரவு பெறச் செய்தது, பக்தியூடாக இறைவனை அடைய வழிகாட்டியது. சைவ அறிவியலை மக்கள் மயப்படுத்தியது.

அற்புதம் - 1) நரியை பரிகளாக்கியமையும் பரியை நரிகளாக்கியமையும், வைகை ஆறு பெருகெடுத்தமை

2) வாதிட்ட பௌத்தரை ஊமையாக்கிய பின் பேச செய்தமை.

3) பாவை பாடிய வாயால் கோவை பாடுக என இறைவனே விரும்பிக்கேட்டு எழுதி ஒப்பமிட்டமை.

(5 புள்ளி)

*07. 1)*

- ✦ பல்லவர் கால சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது பக்தி இயக்கம்.
- ✦ பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக சம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் விளங்கினர்.
- ✦ பொது மக்களை சமய நெறியில் ஈடுபட வைப்பதில் பக்தி இயக்கம் பெருந்தொண்டாற்றியது.
- ✦ திருமுறை பாராயணம், தலயாத்திரை, சமய வாதம் என்பவற்றில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு காணப்பட்டது.
- ✦ மன்னர்களின் ஆதரவு காணப்பட்டது. பத்தி இயக்கத்தினர் ஆலயப்பணிகளில் ஈடுபட்டனர்.

1) புறசமயக்கண்டனம்
2) சைவ சமய மீட்டுருவாக்கம்
3) கலைஞர்களை இணைத்தல்
4) இசையுடன் தோத்திரம்பாடல்
5) இறைவனை அன்பு நெறியில் வழிபடல்.

முதலிய துறைகளிலும் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு காணப்பட்டது. பக்தி இயக்கத்தின் எழுச்சியில் வைதிக நெறி செழிப்புற்றது.

(5 புள்ளி)

2)

- ✦ இந்தியக் கோயிற்கலை முதன் முதலாக செல்வாக்குப் பெற்றது. ஆகம மரபுகள் ஆலய அமைவுகளில் புகுத்தப்பட்டது.
- ✦ நிரந்தர முறையிலான திராவிட முறைக் கோயில்களின் உருவாக்கம்.
- ✦ மகேந்திரவர்மன் குகைக் கோயில்களை ஆக்கினார். மலைதளி கற்றளிக் கோயில்களின் எழுச்சி காணப்பட்டது.
- ✦ ஆலயங்கள் ஆன்மீகத்தை மட்டுமன்றி கல்வி, கலை ஆகிய துறைகளையும் விருத்தி செய்தன.

agaram.lk

- ✦ காஞ்சி கைலாசநாதர் கோயில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் என்பனவும் மாமல்லபுரம் சித்தன்ன வாசல் முதலிய கோயில்களும் செல்வாக்குப் பெற்றன.
- ✦ கட்டடம், சிற்பம், இசை, நடனம், ஓவியம் முதலிய கலைகள் ஆலயங்கள் மூலம் சிறப்பாக வளர்க்கப்பட்டது.

(5 புள்ளி)

08. 1) திருமூலர்

கி.பி 3ம் நூற்றாண்டு – 6ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது.

திருக்கைலாச மரபில் வந்தவர் இம்மரபினைச் சிவமரபு, நந்திமரபு, நாதன் மரபு என அழைப்பர் திருதந்தி தேவரிடம் சிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர் இளமைத் திருநாமத்தை சுந்தரநாதன் என கொண்டவர் இடையன் மூலனின் இறந்த உடலில் கூடுவிட்டு புகுந்து திருமூலராக விளங்கியவர். திருவாவாடுதுறையில் யோக திஷ்டையில் ஆழ்ந்தவர். தமிழ் நாட்டில் உதித்த சித்தர்களில் தலைமைச் சித்தராகக் கருதப்படுகிறார் சித்தர் பரம்பரையின் வித்து எனப் போற்றப்படுகிறார்.

(5 புள்ளி)

2) திருவாவடுதுறை ஆதினம்

| | |
|---|---|
| காலம் | - நாயக்கர் காலம் |
| அமைவிடம் | - நாகபட்டினம் மாவட்ட மயிலாடுதுறை கும்ப கோணம் சாலையில் உள்ளது. |
| பரம்பரை | - திருக்கைலாச பரம்பரை, மெய்கண்ட சந்தானம் |
| நிறுவியர் | - நமசிவாய மூர்த்திகள் |
| சீடர் | - குழந்தை சிவப்பிரகாசம், மறைஞானதேசிகர், அம்பலவான தேசிகர், தட்சணமூர்த்தி தேசிகர் |
| கிளைமடங்கள் | - 136 |
| பிரதான நூல்கள் | - மெய்கண்ட சாஸ்திரங்கள் |

- தசகாரியங்கள், அதிசயமாலை, நிட்டை விளக்கம், நமலியாய மாலை, சித்தாந்த சிகாமணி.

agaram.lk

**சமயப்பணி**

1) கிளை மடங்களை நிறுவியமை
   (உ+ம்) தஞ்சாவூர், வேலூர், கடலூர், தூத்துக்குடி
2) பாடல் பெற்ற தலங்களையும் பிற கோயில்களையும் ஆட்சிக் கோயில்களாக கொண்டிருத்தல்.
3) பல நூல்களை எழுதினர்
   திருஞான முனிவர்- சிவஞான படிமம், சிவஞான சித்தி பொழிப்புரை
   கச்சியப்ப முனிவர்- தணிகைப் புராணம்

**சமூகப்பணி**

1) மேல் நிலைப்பள்ளி, ஆகமப்பள்ளி, தட்டச்சு, சுருக்கெழுத்து பள்ளிகளை அமைத்தல்.
2) வள்ளலார குருகுலம், தன்னியா குருகுலம், கருணை இல்லம் முதலானவற்றை அமைத்தல்.
3) மெய்கண்டான் நூல் வெளியீடு
4) இயற்கை அனர்த்தங்களின் பொழுது உதவுதல்.

(5 புள்ளி)

3) தஞ்சைப் பெருங்கோயில்

இக்கோயில் கி.பி 1009ல் கட்டிமுடிக்கப் பெற்றது. 1ம் இராசனால் கட்டப்பட்டது. இந்தியக் கோயில்களில் கலைவனப்பில் மிகச் சிறந்தது. தென்னிந்தியக் கட்டக்கலை நுட்பத்தின் உச்சநிலையைக் காட்டுகின்றது. விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தியின் பீடம் இவையனைத்தும் 500 அடி நீளமும்250 அடி அகலமும் கொண்ட விஸ்தீரணத்தில் அடங்கியுள்ளது. கிழக்கில் ஒரு கோபுரம் உள்ளது. கோயிலின் முக்கிய பாகம் விமானம், உயரம் 200 அடி கோயிலின் கருவறையின் நடுப்பகுதியில் பெரிய லிங்கம் ஒன்று உண்டு. இது இராஜ இராஜஜேஸ்வரம், மிருகதீஸ்வரம் என அழைக்கப்படுகின்றது. மண்டபத்தின் முன்பாக நந்திபீடம் உண்டு. இங்குள்ள நந்தி தனிக்கல்லால் செதுக்கப்பட்ட மிகப்பெரிய தோற்றமுடையது. சுவர்கள் எல்லாம் ஏனைய கோயில்களை ஒத்துள்ளன.

(5 புள்ளி)

4) சோழர் கால சமயநிலை

1) ஒரு பொற் காலமாகும்
   சமய நிறைவுக்காலம்
2) கோபுரங்களின் வளர்ச்சி
3) ஆலயங்களை மையமாக கொண்டு கலைகள் கிரியைகள்
   வளர்ச்சியடைந்தமை
4) சமய இலக்கியங்களின் எழுச்சி
   புராணங்கள், 14 மெய்கண்ட சித்தாந்த சாஸ்திரங்கள்
   திருமுறைகளின் தொகுப்பு
5) விக்கிரக கலையின் தோற்றமும் வளர்ச்சியும்.

agaram.lk

(5 புள்ளி)